சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் 02.09.2025
வா.சா.2 – அப்துல்லா S/o.சம்சுதீன்ராவுத்தர்
O.S. No.289/2023
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்வதற்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. நான் வாதி கேட்டுகொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்குதெரியும். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் வாதி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றும் நான் வழக்கிற்காக எனக்கு தெரியும் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் B.A வரை படித்துள்ளேன். நான் வழக்கு ஆவணங்களை படித்து பார்த்துள்ளேனா என்றால் 1997ம் ஆண்டு வாதியின் தகப்பனார் கணபதி எங்களிடம் இருந்து கிரையம் பெற்ற ஆவணங்களை பற்றி எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள 6 செண்டு இடம் பிரதிவாதி லோகேஸ்வரி பெயரில் வாங்கப்பட்டது. மேற்படி வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தை பற்றி மட்டும் தான் எனக்கு தெரியும். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதி லோகேஸ்வரி பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பதை பற்றி குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. வாதியின் அப்பா கணபதி என்ன ஊரில் என்ன தொழில் எத்தனை ஆண்டுகள் செய்து வந்தார் என்ற விபரம் பற்றி முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய தொழிலுக்கும், வாதியின் தொழிலுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல, இருக்கிறது. வாதி தென்னந்தோப்பு வைத்திருந்தார், விவசாயம் செய்து வருகிறார் அதனால்

சம்பந்தம் உள்ளது. கணபதிக்கு ஒவ்வொரு மாதமும் எவ்வளவு வருமானம் வந்தது என்ற விபரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. கணபதிக்கு ஒவ்வொரு மாதமும் ஏற்படுகிற செலவு மற்றும் எவ்வளவு சேமித்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் எத்தனை சொத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எத்தனை சொத்துக்கள் இருக்கிறது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.வழக்கு சொத்து எந்த தேதியில், எந்த வருமானத்தை கொண்டு வாங்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் கிரையம் கொடுத்த தொகை 40000ரூபாய், 1997ம் ஆண்டு எனது சகோதரர் முகமது மதார் கிரையம் கொடுத்தார் என்ற விபரம் மட்டும் தான் தெரியும். மேற்படி விபரத்தை முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால இல்லை. வாதி கேட்டுகொண்டதன் பேரில் அவர் சொல்லி கொடுத்ததை போல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி குடும்பத்தில் என்னென்ன சொத்துக்கள் வாங்கப்பட்டன, அதுதொடர்பாக என்னென்ன பேசி கொண்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி அவருடைய சேமிப்பு தொகை மற்றும் நகைகளை கொண்டு வழக்கு சொத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. கணபதி என்னிடம் அவ்வாறு சொல்லவில்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் கணபதி என்னிடம் பேசிய விபரத்தை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 உயில் ஆவணம் யாரால், எங்கு வைத்து, யார் யார் முன்னிலையில் தயாரிக்கப்பட்டது என்ற விபரத்தை எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. கணபதி என்னையும், விநாயகம் என்பவரையும் அழைத்து சென்றார், மதுரையில் உள்ள வழக்கறிஞரிடம் அவர் உயிலில் கையெழுத்திட சொன்னார் நான் கையெழுத்து செய்தேன். கணபதியும் கையெழுத்து செய்தார். மேற்படி

விபரத்தை முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கணபதி இறந்தபிறகு மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உயிலில் உள்ள கையெழுத்து கணபதியின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல. கணபதி தான் வா.சா.ஆ.1 உயிலில் கையெழுத்து செய்துள்ளார். வா.சா.ஆ.1ல் கண்டுள்ள வழக்கு சொத்தானது பிரதிவாதி தன்னுடைய சுயவருமானத்தை கொண்டு,தன்னுடைய பணத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்து என்றும் அதில் உரிமைகோர வாதிக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் அவர் யாருக்கு வேண்டுமானாலும் உரிமைமாற்று செய்ய அவருக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. மாணிக்கம் என்ற பத்திர எழுத்தர் தான் தரகராக செயல்பட்டு என்னிடம் வந்து சொத்தை கிரையம் கொடுக்கும்படி கூறினார். பிரதிவாதி சொத்தை விற்பனை செய்வதற்காக ஆயத்தம் செய்த போது அதை பற்றி என்னிடம் மாணிக்கம்தெரிவித்தார். மேற்படி விபரத்தை எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை. நான் வாதி கூறியதன் பேரில் தற்போது அதை அவ்வாறே தரகர் பேசியதாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு நேருக்கு நேராக தெரியும். பிரதிவாதி வழக்கு சொத்தை விற்பனை செய்ய முயற்சிக்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளவாறு எந்த நிகழ்வும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.09.02 17:34:09 +0530

Sub Judge

Melur